OS No.27/2013, நாள்:15.12.2020

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : சுஜிமதி |
| வேலை | : முதுநிலை வருவாய் ஆய்வளார் |
| அலுவலகம் | : போச்சம்பள்ளி |
| தாலுக்கா | : போச்சம்பள்ளி |

<u>வா.சா.3 ___ சுஜிமதி, முதுநிலை வருவாய் ஆய்வாளர் ஆஜர் முதன்மை விசாரணை :-</u>

நான் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வட்டாட்சியருக்கு வந்த அழைப்பாணையின் பேரில் அவர் சார்பாக சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி வழங்கியுள்ளார். வட்டாட்சியர் வழங்கிய அனுமதி கடிதம் மூ.சா.ஆ.1 ஆகும். எங்களுக்கு வந்த அழைப்பாணையின் பேரில் காட்டாகரம் கிராம புல எண்.274/7 நிலஉடமை மேம்பாடு திட்டத்தின் கீழான அ-பதிவேடு, அடங்கல் ஆகியவற்றை எடுத்துவந்துள்ளேனா என்றால் எடுத்துவந்துள்ளேன். மேற்படி புல எண்ணுக்கு அ-பதிவோடு யார் பெயரில் உள்ளது என்றால் தண்டபாணி த/பெ பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது. புல எண்.274/7ல் விஸ்தீரணம் என்னவென்றால் 0.16.50 ஹெக்டேர்கள் ஆகும். புல எண்.276/1ஏ6ல் விஸ்தீரணம் 0.03.00 ஹெக்டேர்ஸ் ஆகும். மேற்படி புல எண்ணுக்கு தண்டபாணி பெயரில் பட்டா வழங்குவதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது

என்றால் அ-பதிவேட்டில் வெங்கடப்பநாயுடு மகன் சின்னசாமி பெயரில் உள்ளது. அ-பதிவேடு நிரந்தரமான பதிவேடு என்றால் சரிதான். உரிமையாளர் பெயரில்தான் அ-பதிவேடு வரும் என்றால் பட்டா மாற்றம் செய்தால் மட்டும்தான் அ-பதிவேட்டில் மாற்றங்கள் ஏற்படும். மேற்படி புல எண்.274/7ல் அ-பதிவேட்டின் நகல் மூ.சா.ஆ.2 ஆகும். மேற்படி புல எண்ணின் அடங்கல் பதிவேட்டின் நகல் மூ.சா.ஆ.3 ஆகும்.

குறுக்கு விசாரணை

தண்டாபாணிக்கு முன்பு சின்னசாமி பெயரில் எந்த பட்டா எண்ணில் இருந்தது என்றால் பட்டா எண்.440ல் இருந்தது. பட்டா எண்.440 வெங்கடப்பாநாயுடு மகன் சின்னசாமி, மாரியப்பன் மற்றும் முருகன் பெயரில் கூட்டாக இருந்தது என்றால் நிலஉடமை மேம்பாடு திட்டததின்போது சின்னசாமி பெயரில்தான் இருந்தது. 1995-96 காலக்கட்டத்தில் மாரியப்பன் பெயர் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளது. எங்கள அலுவலகத்தில்தான் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிப்போம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 உத்தரவு போச்சம்பள்ளி மண்டல துணை வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு என்றால் சரிதான். அந்த உத்தரவில் பட்டா எண்.440ல் மூன்று நபர்கள் பெயரில் கூட்டாக காணப்படுகிறது என்றால் சரிதான் அது யார் யார் பெயரில் உள்ளது என்றால் வெங்கடப்பநாயுடு மகன் சின்னசாமி, வெங்கடப்பநாயுடு மகன் மாரியப்பன் எல்லப்ப கவுண்டர் மகன் முருகன் ஆகியோர் பெயர் உள்ளது. அந்த உத்தரவில் பட்டா மாறுதலுக்கு முன்பு மேற்படி மூன்று நபர்கள் பெயரிலும், மாறுதலுக்கு பின்னிட்டு எட்டு நபர்கள் பெயரிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் கொண்டு வந்த அடங்கல் பதிவேடு எந்த பசலிக்கானது என்றால் 1401-க்கான பசலி ஆகும்.

அதில் சின்னசாமி, மாரியப்பன் ஆகிய இருவர் பெயரில் காணப்படுகிறது என்றால் சரிதான். அ-பதிவேட்டில் என்ன பெயர் உள்ளதோ அதே பெயர்களில்தான் வரிவசூல் பதிவு செய்வோம் என்றால் சரிதான். பட்டா பொறுத்து எதாவது பிரச்சனை இருந்தால் வட்டர்சியர் மேல் உள்ள அதிகாரியிடம் முறையாக மனு கொடுத்தால் விசாரிப்பார்கள் என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள சிட்டா நகலில் சின்னசாமி மாரியப்பன் பெயர் உள்ளது என்றால் சரிதான். அந்த சிட்டா நகல் மூ.சா.ஆ.4 ஆகும். வருவாய் ஆவணங்களின் நம்பகத்தன்மை உத்தரவுகளின் பேரில்தான் உண்மை நிலை தெரியவரும் என்றால் சரிதான்.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.